

தங்க வேட்டை
ARCHIE





ம்சனும், விக்டரும் தென் அமெரிக்காவில் ஒரு கானகப் பகுதியில் ஊடுருவி பயணம் சென்று கொண்டிருந்தனர். வழக்கம் போலவே நிகரற்ற வலிமையும், மதி நுட்பமும் படைத்த இரும்பு மனிதன் 'ஆர்ச்சி'யும் உடன் சென்றது. சிரமமான இந்த நீண்ட பயணத்தை அவர்கள் மேற்கொள்ளத் தூண்டியது – விக்டரின் சித்தப்பா விட்டுச் சென்ற திராளதொரு வரைபடமாகும். கனவிலும் எண்ணிப் பார்த்திராத நோதமான விபரீதமான அனுபவங்கள் அவர்களுக்கு அங்கே காத்துக் காண்டிருப்பதை அறியமாட்டார்கள்.


இங்கே முகாமிட்டு இன்றிரவை கழிப்போம்...ஹே...ஆர்ச்சிப் பையா! சீக்கிரம் விறகுக் கட்டைகளைக் கொண்டு வந்து நெருப்பில் போடு!


ஆர்ச்சி நமக்கு இரவு உணவை சமைத்துக் கொண்டிருக்கையில் நாம் இந்த வரைபடத்தை மீண்டும் ஒரு முறை கண்ணோட்டமிடலாம்! உன் சித்தப்பா குறிப்பிட்டிருப்பது போல் இந்தப் பகுதியில் நிஜமாகவே ஒரு தங்கச் சுரங்கம் இருக்குமா என்று இன்னமும் நான் சந்தேகப்படுகிறேன்!


5
நிஜம் என்னவென்று கண்டறியத் தானே நாம் இங்கே வந்திருக் கிறோம்! கதை கதையாக பேசப் படும் எல் டொராடோ தங்கச் சுரங்கங்களில் இதுவும் ஒன்றாக இருக்கலாம்! ஒருவேளை நிஜமாக இருந்து விட்டால் நொடியில் நாம் செல்வச் சீமான்களாகி விடுவோம்!
அப்போது திடீரென்று கேட்ட உறுமல் சப்தம் அவர்களை திடுக்கிட்டு எழச் செய்தது...
ஆவ்...! சிறுத்தைப் புலி...!
ஆர்ச்சி-சீக்கிரம் போ...எங்களைக் காப்பாற்று!
தாம்சன் வசமிருந்த டிரான்ஸ்மிட்டரால் தூண்டப்பட்ட ஆர்ச்சி மின்னல் வேகத்தில் பாய்ந்து முன்னேறியது...



ம...அப்படித்தான்-இறுகப் பிடிதது‌க் கொள்! ஏதோ அதை கலவரப்படுத்தியிருக்க வேண்டும்-மிரட்சியடைந்து அது ஓடிவந்தபோது, எதிர்ப் பட்ட நம்மைத் தாக்க முயந்சித்திருக்கிறது!
கொதிப்படைந்துபோயிருந்த அந்த 350பவுண்டு எடைகொண்ட எதிரியை சாந்தப்படுத்த தாம்சன் ஒரு யுக்தியை கையாண்டான்.
அப்படியே ஆற்றினுள் இறங்கிச் சென்று, அந்த விலங்கை நீரினுள் அமிழ்த்துவிடு ஆர்ச்சி!
நன்றாக நனைந்துவிட்ட சிறுத்தை ஆளைவிட்டால் போதும் என்று எதிர்திசை நோக்கி நீந்தலாயிற்று.
இனி...நம் வழிக்கு வராது!
ARC
அதை கலவரப் படுத்தியது எது அல்லது யார் என்று தெரிந்துகொண்டு விடுவது நல்லது!
ஆர்ச்சி கரையேற டிரான்ஸ் மிட்டரை தாம்சன் இயக்கிக் கொண்டிருந்த போது பிரகாசமான விளக்கொன்று அவர்களை நோக்கி ஒளி வெள்ளத்தை பாய்ச்சியது...
என்ன அது— அஹ்!
பெரிய மோட்டார் படகி லிருந்து வருகிறது... சிறுத்தைப் புலியை கலவரப் படுத்தியதும் இதுவாகத் தானிருக்கலாம்!



ஒலிபெருக்கி மூலம் ஒரு முரட்டுக்குரல் ஆணை பிறப்பித்தது!
கைகளை மேலே தூக்குங்கள்-தப்பியோட முனைந்தால் சுடப்படுவீர்கள்-ஜாக்கிரதை!


இம்மாதிரி அச்சுறுத்தலுக்கெல்லாம் அப்படியே அடிபணிந்து போக வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இல்லை-தாம்சன் மின்னல் வேகத்தில் ஆர்ச்சியை செயலாற்றத் தூண்டினான்...
பழங்களை எறிந்து அவர்களைத் தாக்கு ஆர்ச்சி.... தங்கள் முயற்சியைக் கைவிட்டு அவர்கள் ஓடிப்போக வேண்டும்!
மரத்தை வளைத்துப் பிடித்து பின்னர் சட்டென்று விட்டு விட்டது ஆர்ச்சி...கவணி-லிருந்து கிளம்பிய கல் போல் அத்தனை பழங்களும் விசையோடு பறந்து சென்றன-எதிரிகளை குறிவைத்து!
சரியாகக் குறிவைத்தாய்—சபாஷ்டா-கண்ணு! விடாதே அவர்களை-மறுபடியும் குறி வை!
அ...ஹ்ம


இன்னொரு மரத்தை முன்போல் ஆர்ச்சி வளைத்தபோது கொஞ்சமும் எதிர்பாரா விதமாக அந்த மரம் முறிந்து ஆர்ச்— சியின் மீது விழுந்தது ..
ஹைய்-ய்-ய்-மோசம் போ னோம்! யாரோ கொள்- ளைக்காரர்களாக்கும் என்று எண்ணினேன். அப்படியில்லை!
கைகளை தூக்குங்கள்! இன்னமும் நீங்கள் உயிரோடிப்பது உங்கள் அதிர்ஷ்டம்தான்!



மரத்தினடியில் சிக்கிக் கொண்டுவிட்ட ஆர்ச்சியிடம் எந்த இயக்கத்தையும் காணோம்...
காவல் துறையினர்! ஆபத்தில் சிக்கிக் கொண்டு விட்டோம்!
என்...எதற்காக இந்த ஆர்ப்பாட்டம்-இன்ஸ்பெக்டர்?
உங்களுக்கே தெரியும்- அதனால்தான் எதிர்த்து நின்றீர்கள்! சட்ட விரோத முறையில் துப்பாக்கி விற்பனை செய்துவரும் குற்றத்திற்காக உங்களை கைது செய்கிறேன்!
அதைக் கேட்டு சீறினான் தாம்சன்...
தாங்களொன்றும் கள்ளத்தனமாக துப்பாக்கி விற்பனை செய்பவர்களல்ல...தவறாகப் புரிந்து கொண்டு பிழையான காரியத்தைச் செய்கிறீர்கள்!
விசாரணையில் உண்மை வெளிவரத்தான் போகிறது. கார்லோஸ்- இவர்களுடைய ஜீப்பை நம் தலைமையகத்துக்கு ஓட்டிக்கொண்டு வா- சோதனை செய்ய வேண்டும்!


மரத்தினடியில் அகப்பட்டுக் கொண்டு விட்ட ஆர்ச்சியை மீட்டு கைது செய்ய இயலாமல் திணறினார்கள்.......
காப்டன் கிரேனும், பெரிய வாகனமும் தேவைப்படுகிறது!
அந்த இயந்திர மனிதனை அப்படியே விட்டு வாருங்கள்—நானே அதை மீட்டு வர ஒரு விசேட குழுவை இங்கே தகுந்த உபகரணங்களோடு அனுப்பி வைப்போம்!



மறுநாள் விடிகாலையில் விக்டரும், தாம்சனும் சான் புருஜோவில் சிறை யிலடைக்கப்பட்டிருந்தனர்.....
இதெல்லாம் என்ன பைத்தியக்காரத் தனம்? அடுத்து என்ன நடக்குமோ-தெரியவில்லையே!
கவலைப்படாதே! ஜீப்பில் வித்தியாசமான சாமான்கள் எதுவும் இல்லை என்று தெரிய வந்ததும் நம்மை விடுவித்து அனுப்பி விடுவார்கள்—பாரேன்!


ஆனால் தாம்சனின் நினைப்பு தவறாகிப் போனது...
புத்திசாலிகள்தான் நீங்கள்! எங்களைக் கண்டதும் துப்பாக்கிகளை எங்கே கொண்டுபோய் சாதுரியமாக ஒளித்து வைத்து விட்டீர்கள்-விரைவிலேயே அவற்றை தேடிக் கண்டுபிடித்து எடுத்துவிடுவோம்— அதுவரை நீங்கள் இங்கேயே இருங்கள்!
சிறையின் கனமான கதவுகள் மீண்டும் மூடிக்கொண்டு விட்டன...
மாதக் கணக்கில் நாம் இங்கே அடைபட்டுக் கிடக்க வேண்டியிருக்கும் போலிருக்கிறதே! நாம் நிரபராதிகள் என்று நிரூபிக்க வகையும், வாய்ப்பும் இல்லை!
தங்கச் சுரங்கத்தை தேடி நாம் புறப்பட்ட பயணம் ஆரம்பத்திலேயே கோளாறாகி விட்டது...சே!



பின்னர், ஆர்ச்சியை ஏற்றி வந்த வாகனம் ஒருவாறாக அங்கே வந்து சேர்ந்தது...
அதோ...ஆர்ச்சி வந்துவிட்டது! அதைப் பயன்படுத்தி இந்த சிறைச்சாலை சுவரைத் தகர்த்து நாம் தப்பியோடுவதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?
இப்போது நாம் சிக்கிக் கொண்டு விட்டிருக்கும் பிரச்னையில் ஆர்ச்சியால் எவ்வகையிலும் நமக்கு உதவ முடியாது என்பது என் கருத்து!
வேறு வினையே வேண்டாம்! காவல்படை மொத்தமும் நம்மீது ஏவி விடப்படும்—அப்படியொரு முயற்சி நாம் நிஜமாகவே குற்றவாளிகள்தான் என்று தீர்மானிக்க காரணமாகி விடக்கூடும்!
அப்போது—மேட்டுப் பகுதியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த ஒரு பயணிகள் பஸ் தறிகெட்டு ஓடத் தொடங்கியது...
ஐயையோ...பிரேக் பிடிக்க மாட்டேனென்கிறது!



பஸ்வேகம் எடுத்து தலைதெறிக்க ஓடத் தொடங்கியது. மிரட்சி யடைந்த டிரைவர் ஹாரனை பல மாக தொடர்ந்து அடித்துக் கொண்டே சென்றார்....
ஓடுங்கள்.... வழியில் நில்லாதீர்கள்.... பிரேக் கெட்டுப் போய்விட்டது போலிருக்கிறது!
தெருவில் கேட்ட கூக்குரல் அடைபட்டுக் கிடந்த இளைஞர்களின் செவி களிலும் விழுந்தது....
தறிகெட்டு ஓடும் அந்தப் பஸ் நேராக சிறைச்சாலை கட்டிடத்தை நோக்கியல்லவா வருகிறது!


சட்டென்று தன் மார்பில் தொங்கிக்கொண்டிருந்த டிரான்ஸ்மிட்டரை இயக்கினன் தாம்சன்...
ஆர்ச்சி-உடனே செயலில் இறங்கு! நிகழவிருக்கும் பயங்கர விபத்தைத் தடுக்க உன்னால் மட்டுமே முடியும்!



டிரான்ஸ்மிட்டரால் இயக்கப்பட்ட ஆர்ச்சி ஒரே உதறலில் தளைகளை அறுத்தெறிந்து தன்னை விடுவித்துக் கொண்டு பாய்ந்தோடியது!
உதவி உதவி! இயந்திர மனிதன் தப்பியோடுகிறன்!


அதிர்ந்துபோன காவல்படையினர் என்ன ஏது என்று தெளிவாக புரிந்து கொள்ள இயலாத குழப்பத்தில் ஆர்ச் சியை நோக்கி சரமாரியாக சுட்டனர்.
சிறைச்சாலையின் முகப்பு கதவுக தள்ளித் திறந்து கொண்டு பாய் தோடியது ஆர்ச்சி—
ஆம்...அப்படித் தான்—ஓடு!
திடீரென்று விக்டர் பீதியோடு கூவினான்—
தப்புப் பண்ணிவிட்டாய் தாம்சன் - வேகமாக ஓடிவரும் பஸ்ஸும் ஆர்ச் சியும் நேருக்கு நேர் மோதிக் கொண்டால், பின்னர் ஆர்ச் சியை காயலான் கடையில் கூட வாங்க மாட்டான்!


ஆனால்...கடைசி விநாடியில் பக்கவாட்டில் பாய்ந்து நேரடி மோதலை தவிர்த்துக் கொண்டு விட்டது ஆர்ச்சி...


ஆர்ச்சியை கட்டுப்படுத்தி வழிநடத்தும் டிரான்ஸ்மிட்டரை மிக சாமர்த்தியமாக இயக்கினன் தாம்சன்...
அப்படித்தான்...பம்பர் கம்பியைப் பற்றி இழு ஆர்ச்சி!


அடுத்து என்ன நடக்குமோ என்ற கவலேயோடு நண்பர்கள் ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்தனர்...
இழு—பஸ்ஸின் வேகத்தை மட்டுப்படுத்து!
பயல் சமாளித்து விடுவானு?


ஆர்ச்சி நங்கூரமாகவும், பிரேக்காகவும் இயங்கியதால் பஸ்ஸின் வேகம் குறையத் தொடங்கியது...
ஆனாலும் பஸ் சுவரில் மோதுவதை தவிர்க்கவே முடியாதுதான்!



ஆற்றல் மிக்க ஆர்ச்சிக்கு அது ஒரு சரியான சவால்தான்...
இயந்திர மனிதனுக்கு ஆயிரம் நன்றிகள்!
அட...பஸ் நின்று விட்டதே!


தாம்சனும், விக்டரும் நிம்மதியாக பெருமூச்சு விட்டார்கள்...
பஸ்ஸில் பயணம் செய்தோருக்கு மத்தியில் கதாநாயகனாக நிற்கிறான் பார்! இந்தப் பாராட்டுக்குரியவன்தான்! ஆனால், நாம் சிறையிலிருந்து தப்பித்துக் கொள்ள ஒருவேளை ஆர்ச்சியை பயன்படுத்துவோமோ என்ற எண்ணம் போலீஸாருக்கு திடீரென்று உதயமாகலாம்!
ஆமோதிப்பதாக தலையை ஆட்டினான் தாம்சன்...
இதோ போலீஸார் வருகிறார்கள். நம்மிடமுள்ள டிரான்ஸ்மிட்டரை நிச்சயம் பறித்துக் கொள்ளத் தான் போகிறார்கள்!


ஆனால் நடந்ததோ வேறு...
உங்களுடைய சமயோசிதத்தால் பல உயிர்கள் காப்பாற்றப் பட்டு விட்டன... நீங்கள் கைது செய்யப் பட்ட காரணத்தை மறு பரிசீலனை செய்யலாமென்று நினைக்கிறேன்— வாருங்கள் போகலாம்!
அதையடுத்து—
நாங்கள் நிர பராதிகள் என்று நிரூபிக்கவும், உண்மையான குற்றவாளிகளை கண்டு பிடித்து உங்கள் வசம் ஒப்படைக்கவும் எங்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தீர்கள் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம்!
நீங்கள் செய்திருக்கும் உதவியை கருத்திற்- கொண்டு, உங்கள் கோரிக் கையை ஏற்றுக் கொள்கிறேன்!


தாம்சன், விக்டர், ஆர்ச்சி, மூவர் மீதும் நம்பிக்கை கொண்ட இன்ஸ்பெக்டர் அவர்களை வெளியே செல்ல அனுமதித்தார். காட்டுவாசிகளுக்கு போர் ஆயுதங்களை விற்பனை செய்யும் கொடியவர்களை பிடித்து சட்டத்திடம் ஒப்படைக்க முடியாத பட்சத்தில்மூவரும்தாமாக சரண் அடைந்து விடுவது என்ற ஏற்பாடு!
நாம் தேடியலையும் தங்கச் சுரங்கத்துக்கும், கள்ளத்தனமாக துப்பாக்கி விற்பனை செய்துவரும் சமூக விரோதிகளுக்கும் ஒருவேளை விசித்திரமான-தொரு தொடர்பு இருக்கலாமோ என்று என் உள்ளுணர்வு சந்தேகிக்கிறது!
அப்படியே நம்புவோமாக! ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!
மீண்டும் ஜீப் கானகத்தின் உட்—பகுதிக்கு வந்து சேர்ந்தது...
தொடர்ந்து போய்க்கொண்டேயிரு ஆர்ச்சி! துப்பாக்கி விற்பனை செய்யும் சமூக விரோதிகள் நடமாடும் பகுதி இது! ஆச்சரியம் என்னவென்றால் தங்கச் சுரங்கத்துக்கு பாதை இந்த வழியாகச் செல்வதாக வரைபடத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது!


விக்டர் சந்தேகத்தோடு சற்று முற்றும் நோக்கினான்...
தாம்சன்...யாரோ நம்மை கண்காணித்துக் கொண்-டிருப்பதாக எச்சரிக்கை விடுக்கிறது என் உள்ளுணர்வு!
திடீரென்று—
பேசாமல் சரணடைந்து விடுங்கள்—இல்லையேல் உயிர் உங்களுக்கில்லை!
22


சரமாரியாக சீறிக்கொண்டு வந்தன தோட்டாக்கள்...
இப்படியே அவர்களை தாண்டிச் சென்றுவிடுவது தான் உயிர் தப்பிக்க இருக்கும் ஒரேவழி!


ஆர்ச்சியின் பின்னே தோழர்-களிருவரும் பதுங்கிக் கொண்டு விட்டனர்...ஆர்ச்சியை தொட்ட தோட்டாக்கள் சிதறிப் பறந்தன...
நெருக்கடியை ஆர்ச்சி சமாளித்துவிடும் என்று நம்புவோமாக!
ஆனால் விக்டரின் எதிர்பார்ப்பு ஏமாற்றத்தில் முடிந்தது...
அங்கே கவனி! மரம் ஒன்று பாதையை அடைத்துக் கொண்டு குறுக்கே கிடக்கிறது!
வளைத்துத் திருப்பி ஆற்றை நோக்கி ஓட்டு ஆர்ச்சி!


ஆ....வ்! சட்டி சுடுகிறதே என்று குதித்து நெருப்பில் விழுந்த கதையாகி விட்டதே.... முதலை களிடம் மாட்டிக் கொண்டு விட்டோம்!
சமாளித்து ஓட்டு!
கர்...புர் என்று முனகிய எஞ்சின் சட்டென்று இயக்கமிழந்து போனது.
மாட்டிக் கொண்டு விட்டோம்— வகையாக!
ஆர்ச்சி...எங்களின் உயிர் இப்போது உன் கையில் தானிருக் கிறது!



வெற்றிக்களிப்போடு காட்டு
வாசிகள் நெருங்கி வந்தனர்...
நம்மிடமுள்ள துப்பாக்கிகளை
பறிக்க வந்திருக்கும் போலீஸ்
உளவாளிகளிடம் கருணை காட்டா
தீர்கள்-கிடைக்கும் முதல் சந்தர்ப்
பத்திலேயே சுட்டுத் தள்ளுங்கள்!



அந்தப் பக்கம்—சீறி வரும்
தோட்டாக்கள்-இந்தப் பக்கம்
பயங்கரமாக வாயைத் திறந்து
கொண்டு வரும் முதலைக்
கூட்டம்...
நம்மைக் குறிவைத்
துத்தான் வருகின்றன!
ஓர் அற்புதமான திட்டம் உரு-
வாகியிருக்கிறது என் மூளையில்!
ஆர்ச்சியைக் கொண்டு செய
லாற்றப் போகிறேன்...!


டிரான்ஸ்மிட்டரின் இயக்கம் ஆர்ச்சியை தூண்டியது -
அப்படியே அலாக்காகத் தூக்கி அந்த காட்டுவாசிகளை நோக்கி வீசு.... அவர்களின் கவனத்தை திசை திரும்பச் செய்யும் யுக்தி இது!
ராட்சஸ முதலையை அநாயாசமாகத் தூக்கி எறிந்தது ஆர்ச்சி...
தங்களை நோக்கி இப்படி யொரு பாணம் வருமென்று காட்டுவாசிகள் கற்பனை செய்திருக்கக் கூட மாட்டார்கள்....


பீதியடைப்பட்ட காட்டுவாசிகள் மிரட்சியடைந்து ஓடினர்...
இப்படிப் போய் விழுவதால், உறுதியான உடலமைப்புக் கொண்ட முதலைகளுக்கு அடிபடாது என்றபோதிலும் அவை ஆவேசமடைந்து தாக்க முயற்சிப்பது உறுதி!
தங்கள் தோழர்களுக்கு நேர்ந்த கதியைப் பார்த்த மற்ற முதலைகள் விலகி ஓடலாயின—
ப்பூ...! இனி எதைக் கொண்டு எதிரிகளைத் தாக்குவது?
28



ஆத்திரத்தால் கொதிப்படைந்து போயிருந்த காட்டுவாசிகள் பழி-வாங்கும் எண்ணத்தோடு மீண்டும் ஒன்றுகூடி நெருங்கி வந்தனர்...
மறுபடியும் தாக்க வருகிறார்கள்... ஜீப்பில் இருக்கும் உணவுப் பொருள் மூட்டைகளை எடுத்து வீசி அவர்களை விரட்ட முயற்சி செய்...ஆர்ச்சி!


சொன்னபடி செய்தது ஆர்ச்சி... ஆனால் நிலைமையில் மாறுதல் ஏற்படவில்லை...
சில மாவு மூட்டைகளை வீசி அவர்களை விரட்டிவிட முடியாது...வேண்டுமானால் அவர்கள் நம்மை தாக்குவதை சில நிமிடங்களுக்கு தேக்கி வைக்கலாம்— அவ்வளவுதான்!



திடீரென்று ஓர் அற்புதம் நிகழ்ந்தது அங்கே—
என்ன ஆயிற்று அவர்களுக்கு? தாக்குதலை சட்டென்று நிறுத்திக் கொண்டு விட்டார்களே!



ராட்சஸ வடிவிலான கால் தடங்களை சுட்டிக் காட்டியவாறு பேசிய காட்டுவாசிகள் தலைவனின் கண்களில் பீதி குடிகொண்டிருந்தது...
இதைக் கவனித் தீர்களா?


காட்டுவாசிகளின் முகங்களில் இதுவரை தென்பட்ட ஆத்திரமும், கோபமும் மறைந்து அச்சம் பரவியது...
கிராமத்தை அழிக்கும் சைத்தானின் காலடித் தடங்கள்! வாருங்கள் ஓடிப் போய் விடுவோம் இங்கிருந்து- இல்லையேல் அதனிடம் நாம் அகப்பட்டுக் கொண்டு மடிவது நிச்சயம்!


காட்டுவாசிகளிடம் திடீரென்று ஏற்பட்ட மாற்றம் கண்டு ஜீப்பில் இருந்தோர் குழப்ப முற்றனர்—
பீதி வசப்பட்டு தலைதெறிக்க ஓடுகிறார்கள்: ஏதையோ அல்லது யாரையோ கண்டு அவர்கள் மிரட்சியடைந்திருக்க வேண்டும்!
அல்லது இது நம்மை ஏமாற்றும் சூழ்ச்சியாகவும் இருக்கலாம்— எதற்கும் நாம் எச்சரிக்கையோடு நடந்து கொள்வது நல்லது.


எனவே, ஆர்ச்சி தன் தாக்குதலை தொடர்ந்து நடத்தியது...
நிஜமாகவே அவர்கள் இங்கிருந்து விலகிச் செல்வதை உறுதி செய்ய இது அவசியம்தான்!
ஆனால் அதற்கெல்லாம் அவசியம் இருக்கவில்லை...
ஓடு...ஓடு! அந்த—ராட்சஸ சைத்தானின் காலடித் தடங்கள்தான் அது...சந்தேகமேயில்லை!
கேட்டாயா அவர்கள் பேசிக் கொள்வதை? அதற்கு என்ன அர்த்தம் என்று விளங்கவில்லையே!
கரைக்குச் சென்று அவர்கள் குறிப்பிடும் காலடித் தடங்களை ஆராய்ந்தால் ஏதாவது விளங்கக் கூடும்!


சில நிமிடங்களுக்குப் பின்—
கண்ணு-கொஞ்சம் மெதுவாகவே இழு—இத்தனை வேகம்...ஆபத்து!



கரையோரம் தென்பட்ட காலடித் தடங்கள் அச்சமளிப்பதாக இருந்தன.
ஊய்! எத்தனை பெரியவை! யாருடைய அல்லது எதனுடைய காலடித் தடங்களோ, தெரியவில்லையே!
காட்டுவாசிகள் மிரண்டு ஓடிப்போனதிலும் அர்த்தம் இருக்கிறது!


ஆர்ச்சியை கட்டுப்படுத்தி வழி நடத்தும் டிரான்ஸ் மிட்டரை வைத்துக் கொண்டிருந்த தாம்சன் சட்டென ஒரு தீர்மானத்துக்கு வந்தான்......
இந்தக் காலடித் தடங்கள் துப்பாக்கி வியாபாரிகள் பற்றி தகவல் அறிய உதவக் கூடுமென்று நினைக்கிறேன்.... மைக்-ரோபோனை இயக்கி ஆர்ச்சியை பேச வைக்கப் போகிறேன் இப்போது!
மறுகணம் ஆர்ச்சியின் உரத்த குரல் அந்த கானகத்தின் நாலா திசைகளிலும் எதிரொலிக்கலாயிற்று-
ராட்சஸர்களையும், முரட்டுக் கொடிய விலங்குகளையும் கொன்று வெற்றி கொள்ளும் ஆற்றல் படைத்த ஆர்ச்சி அழைப்பு விடுக்கிறேன்... காலடித் தடங்களைக் கண்டு மிரண்டு ஓடிய வர்கள் பேச்சுவார்த்தை நடத்த உடனே திரும்பிவருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்
காட்டுவாசிகள் தயக்கத் தோடு திரும்பி வந்தனர்....
திரும்பி வருகிறார்கள் துப்பாக்கிகளோடு!
ஆர்ச்சியின் செயல்திறன் எப்படிப்பட்டது என்று இப்போது அவர்களுக்கு காட்டப் போகிறேன்.


காட்டுவாசிகள் திகைத்துப் போனார்கள்...
அந்த மரத்தை வேரோடு பிடுங்கி எடு ஆர்ச்சி .. காட்டுவாசிகள் உன் ஆற்றலைக் கண்டு பிரமித்துப் போக வேண்டும்!
காட்டுவாசிகள் தலைவன் தயக்கத்தோடு முன்னேறி நெருங்கி வந்தான் அவர்களிடம்...
உன் பலம் எங்களை அசர வைத்து விட்டது...வீரனே! உன்னைப் போல் அசுர பலம் படைத்த ஒருவரால்தான் எங்களை அச்சுறுத்தி நாசம் விளைவித்து வரும் ராட்சஸ சைத்தானை ஒடுக்கி அழிக்க முடியும்!
ம்...அப்படி வாருங்கள் வழிக்கு!




F-7



உங்களுக்கு கள்ளத்தனமாக துப்பாக்கிகளை விற்ற நபர்களை கண்டுபிடித்துக் கொடுப்பதாக வாக்களித்துவிட்டு வந்திருக் கிறேன்... அவர்களைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கும் தகவல் அனைத்தையும் எங்களுக்குச் சொன்னால் போதுமானது!
....ஒப்புக் கொள்வார்களா?


அதே வேளையில், சற்றுத் தொலை விலிருந்த காட்டுவாசிகளின் குடியிருப்பு பகுதியினுள் நுழைந் தது ஒரு ராட்சஸ உருவம்....



சட்டென்று கூச்சலும் குழப்பமும் தலைதூக்கியது அங்கே -
அதோ... ராட்சஸ சைத்தான் வருகிறது- தொலைந்தோம்!
காட்டுவாசிகளின் ஓலம் தலைவனின் செவியை எட்டியது......
ஓ... இரும்பு மனிதரே, அந்த சைத்தானை அழியுங்கள். கள்ளத் துப்பாக்கி வியாபாரிகள் பற்றி எங்களுக்குத் தெரிந்த தகவல்கள் அனைத்தையும் உங்களுக்குச் சொல்கிறோம் உடனே கிளம்புங்கள் எங்கள் கிராமம் ஆபத்தில் இருக்கிறது!
மரக்கொம்பு ஒன்றை ஒடித்து எடுத்துக் கொண்டு உடனே புறப்படு ஆர்ச்சி!


நெஞ்சம் தடக் தடக் என்று அடித்துக் கொள்ள ஆர்ச்சியைப் பின் தொடர்ந்து தாம்சனும் விக்டரும் காலடித் தடங்கள் சென்ற வழியே விரைந்தார்கள்.
ARCH
அங்கே அட்டகாசம் செய்து கொண்டிருக்கும் சைத்தானின் பலம் ஒருவேளை ஆர்ச்சியின் பலத்தையும் மிஞ்சியதாக இருந்து விடுமோ என்று நடுக்கமெடுக்கிறது எனக்கு.


பயண முடிவில் கண்ணில் பட்ட வித்தியாசமான காட்சி அச்சமூட்டுவதாக இருந்தது.
தாம்சன்.... அது என்ன வகையான ஜந்து என்று விளங்கிக் கொள்ள முடியவில்லையே!
அதோ - அந்த சைத்தான் எங்கள் வீடுகளை நாசம் செய்கிறது!

டிரான்ஸ்மிட்டரை இயக்கி ஆர்ச்சியை முடுக்கி விட்டான் தாம்ஸன் -




ஓசை கேட்டு அந்த விலங்கு திரும்பிப் பார்த்தது....





சட்டென்று ஆர்ச்சியின் மீது பாய்ந்தது அந்த ராட்சஸ விலங்கு....
உன்னைவிட எதிரி இரட்டை பலம் கொண்டது—வெற்றி பெற சாதுரியம் தேவை என்பதை நினைவில் வைத்துக் கொண்டு மோது!



சட்டென்று ஆர்ச்சி மல்லாந்து விழ டிரான்ஸ்மிட்டரில் இயக்கம் கொடுத்தான் தாம்சன்...
திறமையான மல்யுத்த வீரன் இந்த சந்தர்ப்பத்தில் என்ன செய்வான் என்று நினைத்துப் பார்...ஆர்ச்சி!


விசையோடு உந்தித் தள்ளியது ஆர்ச்சி! காற்றில் பறந்து, கர்ணமடித்து தூரப் போய் விழுந்தது அந்த ராட்சஸ விலங்கு...
துள்ளி எழுந்து, அந்த சைத்தான் சுதாரித்துக் கொள்ளுமுன் தாக்குதலை தொடர்ந்து நடத்தி வெற்றியை உறுதி செய் ஆர்ச்சி!
ஆனால் ஆர்ச்சி மீண்டும் தன்னை நோக்கி வருவதாக கண்ட அந்த விலங்கு தப்பித்தோம், பிழைத்தோம் என்று பாய்ந்தோடத் தொடங்கியது.....
சைத்தான் பயந்து ஓடுகிறது!
இவர்கள் ஆர்ச்சி என்றழைக்கும் இயந்திர மனிதர் நம்மைக் காப்பாற்றி விட்டார்!



தாம்சன் தலைவரின் பக்கம் திரும்பினான்—
ஒப்பந்தப்படி துப்பாக்கி வியாபாரிகளைப் பற்றிய விபரங்களை இப்போது நீ எங்களுக்குச் சொல்.
ஏமாற்ற நினைத்தாயோ— ஆர்ச்சி உங்களை வதம் பண்ணிவிடும்-ஜாக்கிரதை!
பில்லிசூனிய வேலை தெரிந்த இரண்டு வெள்ளையர்கள், எங்களுக்கு எந்த வகையிலும் பயன்படாத ஒரு வகை மஞ்சள் உலோகத்தை பெற்றுக் கொண்டு பண்ட மாற்றாக துப்பாக்கிகளை கொடுத்து வருகிறார்கள்....
42


மாதிரிக்காக தலைவன் காட்டிய அந்த உலோகக் கட்டியை வாங்கி ஆராய்ந்த தாம்சன் அதிர்ச்சியடைந்தான்...
சந்தேகமேயில்லை..... இது..... தங்கம் தான் - துப்பாக்கிகளைக் கொடுத்து தங்கத்தை வாங்கிச் செல்கிறார்கள் அந்த சமூக விரோதிகள். எல்டோரோடோவில் அழிந்து போன தங்கச் சுரங்கங்களிலிருந்து கிடைக்கப் பெற்றதாக இருக்கக் கூடும் இது!
அதாவது, நாம் தேடி வந்திருக்கும் தங்கச் சுரங்கம் உண்மையிலேயே இருக்கிறது என்பதாகிறது இல்லையா?
அவர்கள் இருந்த உற்சாகத்தில் ஒரு காட்டுவாசி அங்கிருந்து மெள்ள நழுவி ஓடியதைக் கவனிக்கத் தவறிவிட்டனர்...
இந்த ஆசாமிகள் அந்த மஞ்சள் நிற உலோகத்தை தேடித்தான் இங்கே சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு துப்பாக்கி கொடுத்த நபர்களிடம் இந்தத் தகவலை சொன்னால் எனக்கு அவர்கள் ஒருவேளை நல்ல வெகுமதி கொடுக்கக்கூடும்!


பின்னர், தோழர்கள் இருவரும் உற்சாகத்தோடு ஆர்ச்சியின் துணைகொண்டு ஜீப்பை சரிபண்ண முயன்றனர்....
கள்ளத் துப்பாக்கி வியாபாரம் பண்ணுகிறவர்களை விரட்டிப் பிடிக்க வாகன வசதி இருந்தால் மட்டுமே முடியும்....
இந்த காட்டுவாசிகள் சொன்ன தகவலின்படி பார்த்தால் அவர்கள் இங்கே எங்கோ அருகில் தான் இருக்கக் கூடும்.....


ஆர்ச்சி விசையோடு தள்ளி விட்டதும் ''ஜீப்'' இயக்கம் பெற்றது.
சபாஷ்டா கண்ணா! 'ஜம்' மென்று தாவி ஏறிக்கொள் - போவோம்!
பயல் கில்லாடிதான்- சும்மா சொல்லக் கூடாது!


நகரத் தொடங்கிய ஜீப்பினுள் பாய்ந்து ஏறிக் கொண்டது ஆர்ச்சி....
ஏதோ சூனியவேலை தெரிந்தவர்கள் அந்த வியாபாரிகள் என்று சொன்னார்களே அதற்கு என்ன அர்த்தம்?
எனக்கும் பதில் தெரியாத கேள்வி அது! கள்ள வியாபாரிகள் சென்ற பாதை இது தான் என்று அந்த காட்டுவாசிகள் சுட்டிக்காட்டிய ஒரு விபரம் தான் நமக்கு கிடைத்திருக்கும் ஒரே ஒரு உருப்படியான தகவல்!
பில்லிசூனியம் பற்றிய தங்கள் கேள்விக்கான விடை அத்தனை சீக்கிரத்தில் தெரியவரும் என்று தோழர்கள் எண்ணிப் பார்த்தது சென்றதுமே பாதையில் குறுக்கிட்ட ஆற்றில் ஒரு விசித்திரத்தைக் கண்டு திகைத்தனர்.
உஷ்ஷ்... அங்கே பார்!... நீரில் கொப்புளங்கள் தோன்றுவதை! காரணம் என்னவாக இருக்கும் என்று நீ நினைக்கிறாய்?


நீர் மட்டத்தில் தென்பட்ட கொந்தளிப்பைக் கண்டு தோழர்கள் மிரட்சியடைந்தனர்...
நீரிலடியிலிருந்து ஏதோ வெளியே தலைநீட்டுகிறது... பார்!
ஆர்ச்சி...வண்டியை நிறுத்து - கியரை மாற்றி பின்னால் போ.


மறுநிமிடம் விநோதமான வாகனம் ஒன்று கரையேறி அவர்களை நோக்கி வந்தது.
நீரினடியிலும் செல்லக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு டாங்க்...அதிலிருப்பவர்கள் கள்ளத் துப்பாக்கி வியாபாரிகளாக இருக்கக்கூடும்!
காட்டுவாசிகள் இவர்களைக் கண்டு மிரட்சியடைவதிலும் அர்த்தம் இருக்கிறது!
யாரோ நம்மைப்பற்றி இவர்களுக்கு தகவல் கொடுத்திருக்க வேண்டும்! நாம் இவர்களைத்தான் தேடியலைகிறோம் என்றறிந்து முந்திக் கொண்டு தாக்க வருகிறார்கள்!
அப்படித்தான் தோன்றுகிறது - இன்னும் பின்னால் போ...ஆர்ச்சி!


நெருக்கமாக வளர்ந்திருந்த செடி கொடிகள் ஜீப் தொடர்ந்து பின்னோக்கிச் செல்ல இயலாதபடி தடுத்தன...
நேராக வந்து நம்மீது மோதி அழிப்பதுதான் அவர்கள் நோக்கமாக இருக்க வேண்டும்!
ஆர்ச்சி...இந்த இக்கட்டிலிருந்து எங்களைக் காப்பாற்ற உன்னால் தான் முடியும்—போ...ஏதாவது செய்!
டாங்கினுள் இருந்தவர்கள் சற்றே தயங்கினர்...
இப்போது நாம் என்ன செய்யலாம் நிம்போ? அந்த இரும்பு மனிதன் நாசம் விளைவிக்கக் கூடும்.
அதோ எதிரே தெரியும் மரத்தின் மீது போய் மோதி அதை ஜீப்பின் மீது விழச் செய்வோம்... பிறகு அடுத்த நடவடிக்கை பற்றி தீர்மானிப்போம்!
அந்த இரும்பு மனிதனை கட்டுப் படுத்தும் விசை தாம்சனிடமோ விக்டரிடமோ இருக்கக் கூடும். அந்த நபரை அழித்து விட்டால் பின்னர் இயந்திர மனிதனைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமே இராது!


அடியில் இற்றுப் போயிருந்த அந்த மரம் டாங்க்
மீது விசையோடு வந்து மோதியதும் அப்படியே
முறிந்து சாய்ந்தது...
நேராக நம்மீது வந்து விழப்
போகிறது...ஆர்ச்சி - ஓடு...
அடிமரத்தை தாங்கிப்பிடி!


மின்னல் வேகத்தில் பாய்ந்தோ
டியது ஆர்ச்சி...
ஆர்ச்சி முழுத்திறனோடு இயங்க
டிரான்ஸ்மிட்டரை இயக்கு...
தாம்சன்!


ஆர்ச்சி மரத்தை தாங்கிப்
பிடிக்கும் முயற்சியில்
ஏறத்தாழ வெற்றிபெற்ற
போது எதிர்பாராத
விபரீதம் ஒன்று நிகழ்ந்தது!
தரை கடினமானதாக இல்லாததால்
கனமான சுமை காரணமாக
ஆர்ச்சியின் கால்கள் புதையுண்டு
போகின்றன...
ஆர்ச்சி மாட்டிக் கொண்டு
விட்டது!
மரத்தை பக்கவாட்டில்
தள்ளிவிடு ஆர்ச்சி!
காலம் கடந்த செயல்...
இடுப்பு வரை புதையுண்டு
விட்ட ஆர்ச்சியால் மீளவே
முடியாது!
ஆர்ச்சி தொடர்ந்து பூமியினுள்
இறங்கிக் கொண்டிருந்தது...
டிரான்ஸ்மிட்டரை இயக்கி
ஆர்ச்சியைத் தூண்டமுடிய
வில்லை. ஓடு... விக்டர்—
பேராபத்திலிருக்கிறோம்
நாம்!


வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு எதிரிகள் முன்னேறி வந்தனர்.
நம் இரகசியங்களைத் தெரிந்து கொண்டுவிட்ட அவர்களை சுட்டுத் தள்ள வேண்டும்— வா...விரட்டிச் செல்வோம்!
சரமாரியாக தோட்டாக்கள் சீறிக் கொண்டு வந்தன...தாம்சனும், சிக்டரும் செடி கொடிகளை விலக்கிக் கொண்டு ஓடினர்...
அவர்களைத் துரத்துவதை விட்டுவிட்டு, திரும்பி வந்த எதிரிகள் ஜீப்புக்குத் தீ வைத்தனர்...
காட்டின் மத்தியில் வாகன வசதியோ, உணவுப் பொருட்களோ இல்லாமல் மாட்டிக் கொண்டுவிட்ட அவர்களிருவரும் விரைவிலேயே செத்துப் போவது உறுதி. இதோ இந்த இயந்திர மனிதனின் கதையும் முடிந்த மாதிரிதான்!




மெள்ள புதையுண்டு போய்க் கொண்டிருந்த ஆர்ச்சியை அப்படியே விட்டுவிட்டு எதிரிகள் சென்றுவிட்டனர்.
இனி நம்முடைய தங்க வேட்டையைத் தொடரலாம்.
இரண்டுமணிநேர இடைவெளிக்குப் பின், ஜீப் நின்றிருந்த இடத்துக்கு தோழர்கள் வந்தடைந்தனர்... கண்ணில்பட்ட காட்சியைக்கண்டு அதிர்ச்சியடைந்தனர்!
ஆர்ச்சி முழுவதுமாக புதையுண்டு போய்விட்டது...' ஜீப்பையும் எதிரிகள் எரித்துவிட்டிருக்கிறார்கள்.
ஆர்ச்சி இல்லாமல் இங்கே நாம் எதையுமே சாதிக்க முடியாது... தாம்சன்.


பதமாக இருந்த தரை யில் சில தடங்கள் தென்பட்டன...
சேற்றிலிருந்து ஆர்ச்சியை மீட்டு யாரோ இழுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள்
நிறைய காலடித் தடங்கள் அங்கே காணப்படுகின் றன... ஒரு பெருங்கூட்டம் அந்த முயற்சியில் ஈடுபட் டிருக்க வேண்டும்.


நம்பிக்கை துளிர்விட, நண்பர் கள் தடம் சென்ற வழியே விரைந்தார்கள்
ஆர்ச்சிக்கு என்னதான் ஏற்பட்டிருக்கிறது என்று விரைவிலேயே தெரிய வரலாம்... வா-போய் பார்ப்போம்!


இதற்கிடையே கானகத்தின் உட்பகுதியில்—
புதை மணலிலிருந்து மீட்டதற்காக இந்த ராட்சஸன் நமக்கு உதவி செய்யக்கூடும்-நம் எதிரிகளை இவன் துணை கொண்டு நிர்மூலமாக்கி விடலாம்!


ஆற்றங்கரையோரம் இருந்த தங்களுடைய குடியிருப்பு பகுதிக்கு ஆர்ச்சியை இழுத்துச் சென்றனர் அந்தக் காட்டுவாசிகள்.
தண்ணீரை ஊற்றிக் கழுவி சுத்தம் செய்யுங்கள்.
54


இதுவரை ஆர்ச்சியின் மீது யாரும் இத்தனை அக்கறை காட்டியதில்லை!
மூங்கில்கள் வெட்டிக் கொண்டு வந்து மேடை அமையுங்கள்.


தடத்தை பின்பற்றி தோழர்கள் சில மணி நேரம் நடந்தபின்-
அங்கே தெரியும் புகைப் படலம், அருகே கிராமம் இருப்பதாகதெரிவிக்கிறது. மரத்தின் மேலே ஏறி எங்காவது ஆர்ச்சி தென்படுகிறதா என்று பார்ப்போம்...



மறுநிமிடம் அற்புதமானதொரு காட்சியை அவர்கள் கண்டார்கள்...
அங்கே பார்த்தாயா... ஆர்ச்சியை அவர்கள் தங்கள் இனத்திற்கு தலைவனுக்குகிறார்கள் போலும்!
வம்பு... விவகாரம்தான்!
தாம்சன் சட்டென்று தீர்மானித்தான்...
கள்ள வியாபாரிகளை பிடிக்க ஆர்ச்சியின் உதவி நமக்குத் தேவை. ஆகவே, டிரான்ஸ்மீட்டரை இயக்கி ஆர்ச்சியை தாண்டப் போகிறேன்!


டிராஸ்ஸ்மிட்டரை இயக்கிய தாம்சன் அதிர்ச்சி யடைந்தான...
ஆர்ச்சியிடம் எந்த சலனமும் இல்லை!
ஆர்ச்சியின் கட்டுமானத்தில் பழுது ஏற்பட்டிருக்க வேண டும்... டிரானஸ்மீட்டர சமிக்ஞை ஆர்ச்சியிடம் எந்த இயக்கத்தையும் ஏற்படுத்தக் காணோம்...
கருமேகங்கள் வானில் சூழத் தொடங்கின... தற்செயலாக ஆர்ச்சியின் விசை ஒன்றை மாந்திரீகன் தொட்டதுதான் தாமதம்-
அஹா..! அற்புதம் நிகழ்த்தி விட்டேன... ஹாஹா-ஹா! ராட்சஸன வெளிச்சத்தை பாய்ச்சுகிறன்!
துரதிர்ஷ்டவசமாக, ஆரசசியின் தலை-விளக்கு பாய்ச்சிய ஒளி வெள்ளத்தின் பாதையில அகப்பட்டுக கொணடனர் தாம்சனும், விக்டரும்...
கீழே இறங்கு... ஒளி வெள் ளத்தின் பாதையிலிருந்து நாம் உடனே விலகிக் கொண்டுவிட வேண்டும்!
தொலைந்தோம்! இந்நேரம் அவர்கள் நம்மைப் பார்த்து விட்டிருப்பார்கள்!
57


தோழர்களிருவரும் ஆபத்தில் சிக்கிக் கொண்டு விட்டனர்...
அதோ... விளக்கு வெளிச்சம் எதிரிகளை காட்டிக்கொடுத்து விட்டது-ஓடிச் சென்று அவர்களை பிடித்து வாருங்கள்!



கண்ணிமைக்கும் பொழுதில் ஆயுதம் தாங்கிய வீரர்கள் மரத்தைச் சூழ்ந்து கொண்டுவிட்டனர்.
தப்பிக்க எந்த வழியும் இல்லை-வசமாக சிக்கிக் கொண்டு விட்டோம்!
அவர்களுக்கு ஆத்திரமூட்டும் காரியம் எதையும் செய்யாதே


தாம்சனும், விக்டரும் கொஞ்சமும் எதிர்ப்பைக் காட்டவில்லை...
காட்டுவாசிகள் அவர்களை தலைவனிடம் இட்டுச் சென்றனர்.
இவர்களை மேடைக்கு இட்டுச் செல்லுங்கள்-


ஆர்ச்சி ஆரோகணித்திருந்த மேடையின் முன்னால் தோழர்கள இழுத்துச் செல்லப்பட்டனர்...
நம் தேவதைக்கு இவர்களை நரபலி கொடுப்போம் ஒளிபாய்ச்சும் கண்கள் நம் செயலை ஆமோதித்து மகிழ்ச்சியை தெரிவிக்கின்றன ...பாருங்கள்!
ஆர்ச்சியின் தலை-விளக்கை இயக்கும் விசையை யாரோ தற்செயலாக இயக்கியிருக்கிறார்கள்...



மேலே வானம் இருண்டு கொண்டு வருவதைக் கவனித்த தாம்சன் எச்சரிக்கை விடுக்கும் குரலில பேசலானான்...
எங்களைக் கொன்றால் அழிந்து போவீர்கள்... இந்த இரும்பு மனிதன் எங்கள் தோழன் என்பதை தெரிந்து கொள்!
மூடு வாயை ..
மாந்திரீகன் ஈட்டியை உயர்த்தினான்...
உங்களுடைய கடைசி பிரார்த்தனையை சொல் லிக் கொள்ளுங்கள் ..



ஆனால் அந்த முரடன் எட்டியைப் பாய்ச்சுமுன் அச்சுறுத்திக
கொண்டிருந்த சூறைக்காற்று வந்து சேர்ந்தது அங்கே.


கண்ணைக் குருடாக்கும் பிரகாசத்
தோடு மின்னலடித்தது.
ஆ...வ்! ஆர்ச்சியை மின்னல் தாககி விட்டது...!
ARC



சட்டென்று பாய்ந்து எழுந்து கொண்டு விட்டது ஆர்ச்சி.
ஆர்ச்சியை தாக்கிய மின்னல் அதன் கட்டுமானத்தில் ஏற்பட் டிருந்த பழுதை சீர்செய்துவிட் டிருக்ககூடும்-விக்டர் ஏணியை நோக்கி ஓடி வா!


மறுகணம்...
ஆர்ச்சி டிரான்ஸ்மீட்டரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட் டது என்று நம்புகிறேன்... இனி அதை நம இஷ்டத்திற்கு செயலாற்றத் தூண்ட இயலும்!



திகைத்துப்போய் நின்றுவிட்ட காட்டுவாசிகள் சுதாரித்துக் கொண்டு விட்டனர்
அவர்கள் அந்த ராட்சஸனை நம்மீது ஏவுமுன் அவர்களைக் கொன்று போடுங்கள்...


தாம்சனின் டிரான்ஸ்மீட்டர் ஆர்ச்சியை செயலாற்றத் தூண்டியது ..
ம்... அப்படித்தான் - ஏணியை தள்ளிவிடு... அவர்கள் நம்மை நெருங்க முடியாமல் செய்...



தான் யார் பக்கம் என்பதை ஆர்ச்சி
தெளிவாகக காட்டிக் கொணடுவிட்டது.
சபாஷ்டா... கண்ணு!
திடிரென்று சூறைக் காற்று அந்த மேடையை அப்படியே மேலே
தூக்கியது...
ஆபத்து!
ஆர்ச்சியை இறுக பற்றிக் கொள்வோம்!


ஆர்ச்சி மேடையோடு ஒட்டிக் கொள்ள தூண்டுகிறேன்...
மேடையோடு காற்றில் பறந்தார்கள்....
அவர்கள் கீழே இறங்கியபோது அங்கே நெருக்கமாக வளர்ந்து கிடந்த செடி கொடிகள் அவர்களை தாங்கிக் கொண்டு விட்டதால் அடிபடாமல் தப்பிவிட்டனர்....
உனக்கு அடிபடவில்லையே?
இன்னமும் எலும்புகள் முறிந்து போகாதிருப்பது அதிர்ஷ்டம் தான்!


கொதிப்படைந்த காட்டுவாசிகள், விஷம் தோய்ந்த ஈட்டிகளையும் அம்புகளையும் எடுத்துக் கொண்டு பாய்ந்தோடி வந்தனர்...
இரும்பு ராட்சஸனை மீண்டும் நாம் கைப்பற்றியாக வேண்டும். அந்த இரு போக்கிரி நாய்களும் செத்தொழிய வேண்டும்!


விஷம் தோய்ந்த ஈட்டி அல்லது அம்புமுனை இலேசாக கீறினாலும் மரணம் நிச்சயம் என்பதை தோழர்கள் அறிவார்கள்.
இத்தனை பெரிய கூட்டத்தை ஆர்ச்சியால் சமாளிக்க முடியாது... உயிர்பிழைக்க வழியேதுமில்லை!


விஷ ஈட்டிகளும். அம்புகளும்-பறந்து வந்தன.
தாக்கத் தொடங்கி விட்டார்கள்... அதிக நேரம் தாக்குப் பிடிக்க முடியாது!
அப்போது காதில் விழுந்த ரீங்கார ஓசை கேட்டு மேலே நோக்கினார்கள்...
குளவிக் கூடுகள்...! அந்த காட்டுவாசிகள் நம்மை நெருங்கிவராமலிருக்க ஒரு யுக்தியை கையாண்டு பார்ப்போம...!
தாம்சனின் திட்டப்படி பெரிய குளவிக் கூட்டை பிய்த்தெடுத்தது ஆர்ச்சி..
மூங்கில் கழியின் முனையில் அதை வைத்துக் கவண் எறிவதுபோல் அவர்களை நோக்கிச் செலுத்து... சீக்கிரம்!


மின்னல் வேகத்தில் செயலாற்றியது ஆர்ச்சி...
ம். ஒன்-டு-த்ரீ. சுடு!


பறந்து சென்ற கூடு எதிரிகளின் மத்தியில் போய் உடைந்து சிதறியது ..
விடாதே... மீண்டும் மீண்டும் இதே போல் செய்... அவர்களுடைய கவனத்தை திசை திருப்பிவிடும் இந்த யுக்தி!


ஆங்காரத்தோடு கத்தினன் மாந்திரீகன்...
ஊஹூம்... அவன் பேச்சை யாரும் கேட்பதாகத் தெரியவில்லை!
அந்த சைத்தான் நமக்கு எதிராக தன் கைவரிசையைக் காட்டுகிறது... அந்த பன்றிப் பயல்களை முதலில் ஒழித்துக் கட்டுங்கள்!


சீண்டப்பட்டதால் வெறிகொண்ட குளவிகள் ஆக்ரோஷமாகக் கொட்டின... காட்டுவாசிகள் தலைதெறிக்க ஓடினர்..
நம்மைப்பற்றி அக்கறை கொள்ள அவர்களுக்கு ஏது நேரம்-வாருங்கள் இங்கிருந்து ஓடிப் போய்விடலாம்!


யாரும் அவர்களைப் பின்தொடர்ந்து வரவில்லை... சிறிது நேரத்திற்குப் பின்-
ரொம்பவும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை ஆர்ச்சி... இனி, அந்த கள்ளத் துப்பாக்கி வியாபாரிகளைபின் தொடர வேண்டும்!
அது சுலபமான காரியமில்லை! ஒரு விசேஷம் என்ன வென்றால்-நாம் செத்துப் போய் விட்டதாக அவர்கள்நம்பிக்கொண் டிருப்பார்கள்!
இன்னுமொரு சாதகமான விஷயம் இருக்கிறது-அழிந்து போன எல் டொராடோ தங்கச் சுரங்கத்தை தேடித் தான் அந்த அயோக்கிய ர் கள் சென்றுகொண்டிருக்கி றார்கள்... நம்மிடமுள்ள வரை படத்தில் அந்த சுரங்கம் குறிக்கப்பட்டிருக்கிறது... நாம் அங்கே சென்றால் அவர் களை சந்திகக முடியும்!
ஆர்ச்சி ஒரு பருமனான மரத்தை சாய்த்தது-பின்னர்-
அடிமரத்தை குடைந்து மிதவைப் படகாக வடிவமைப்பதில் ஆர்ச் சிக்கு சிரமமே இராது. ஆறறின் வழியாக பயணத்தை மேறகொண் டால் நாம் சுலபமாகவும் சீக்கிரமா கவும் இலக்கைச் சென்றடைந்து விடலாம்...
அதிர்ஷ்டமும் நம் பங்கில் நிறைய இருக்க வேணடும்!



பல தினங்களை அவர்கள் ஆற்றில் பயணம் செய்தனர்...
படகைச் செலுத்தும் பொறுப்பு முழுக்க ஆர்ச்சியினுடையது... உணவு சேகரிக்கும் பணி நம்முடையது!
அதிக சிரமமில்லாத பணி நம்முடையது தான்!



ஆர்ச்சியின தலை-விளக்கின் துணையோடு இரவிலும் பயணம் செய்தார்கள்...
தொடர்ந்து பயணம் செய்வதால் சீக்கிரமே அந்தப் போக்கிரிகளை நெருங்கிவிட இயலும். அவர்கள் அதிக தூரம் சென்றிருக்க முடியாது.
71



இதற்கிடையே விசேட வாகனத்தின் துணைகொண்டு கரடுமுரடான பாதையிலும் விரைந்து முன்னேறிச் சென்று கொண்டிருந்தனர்... எதிரிகள்!
கள்ளத்தனமாக துப்பாக்கிகளைக் கொடுத்து தங்கச் சுரங்கம் பற்றிய விபரங்களை சேகரித்துக் கொண்ட நம் புத்திசாலித்தனத்துக்கு விரைவிலேயே தகுந்த வெகுமதி கிடைக்கப் போகிறது.
டாங்க் போன்ற அமைப்புடைய வாகனங்களால் மட்டுமே அந்த கடினமான ஏற்றங்களில் ஏறிச் செல்ல இயலும்...
தாம்சன், விக்டர், அவர்களுடைய இயந்திர மனிதன் ஆகிய மூவரை -யும் பற்றி இனி நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. இந்நேரம் அவர்கள் நிச்சயம் அழிந்து போயிருப்பார்கள்!



அப்பொழுது தொலைவில் ஒரு தூசுப்படலம் மேலெழும்புவதைக் கவனித்தான் விக்டர்.
அங்கே போவது எதிரிகளின் வாகனம் தான் பிடித்துவிட் டோம் அவர்களை!
பீறிட்ட வேகத்திலேயே வடிந்து விட்டது விக்டரின் உற்சாகம்....
ஆனால் அந்த உச்சியைச் சென்ற டைய பல மாதங்கள் பிடிக்கும் நமக்கு. அதற்குள் அந்தப் பாவிகள் கானகத்துக்குப் போய்ச் சேர்ந்து விடுவார்கள்!



விக்டரின் குரலில் சோர்வு இருந்தது.
காரியம் கைமிஞ்சிப் போய்விட்டதென்று நினைக்கிறேன்
ஆர்ச்சி உதவிக்கு இருக்கும்போது இப்படி தளர்ச்சியடையத் தேவையே கிடையாது.


தாம்சன் டிரான்ஸ்மீட்டரை இயக்கி ஆர்ச்சியை தூண்டினான்...
மிதவைப் படகைத் தூக்கி கரையில் போடு. ஓடிச் சென்று சில மூங்கில்களை வெட்டி எடுத்து வா- மின்னல்வேகத்தில் நடக்க வேண்டும்... காரியம்'


கொடிகளைக் கயிறாக்கி மூங்கில்களை பிணைத்தது ஆர்ச்சி...
ஹே தாம்சன்-
எனக்கு எதுவுமே
புரியவில்லை!
இதோ... இன்னும்
கொஞ்ச நேரத்தில்
தானாகவே புரியும்-
பொறு...!


சில நிமிடங்களுக்குப் பின்-
பைத்தியக்காரத்தன
மாக தோன்றுகிறது!
ஆனாலும் முயற்சித்து
பார்ப்பதில் தப்பு
இல்லை!
ஸ்லெட்ஜ் வண்டி
தயார்- உள்ளே
ஏறி உட்கார்
விக்டர்


எத்தனை அருமையான ஏற்பாடு அது என்று விக்டருக்கு சீக்கிரமே புரிந்து விட்டது...
எத்தனை தூரத்துக்கு வேண்டுமானாலும் ஆர்ச்சி இப்படியே இழுத்துக் கொண்டு ஓடத் தயார். தசைவலி மூட்டுவலி எல்லாம் நம் மாதிரி மனிதர்களுக்குத்தான்!


அந்த விளையாட்டை இரசிப்பதுபோல் மிக உற்சாகமாக இழுத்துக்கொண்டு ஓடியது ஆர்ச்சி ..
ஹே... ஆர்ச்சி-கொஞ்சம் மெதுவாகவே போ... இத்தனை வேகம் ஆபத்து!
எல்லாம் ஆர்ச்சிக்குத் தெரியும்!


அப்போது எதிரிகளில் ஒருவன் தற்செயலாக பின்னால் திரும்பிப் பார்த்தான்....
ஹய்...ய்! விக்டரும் தாம்சனும் இன்னும் உயிரோடுதான் இருக்கிறார்கள்— வேகத்தை உச்சப்படுத்து ஸ்லேட்டர்...
அவர்களுடைய இரும்பு மனிதன் சாகாவரம் பெற்ற சனியன் போலும்.... இப்போது என் வேலையை பார்.... இம்மாதிரி ஒரு அதிர்ச்சியை அந்த இளைஞர்கள் இதுநாள் வரை சந்தித்திருக்கவே மாட்டார்கள்.



வாகனத்தை சற்று பின்னோக்கிச் செலுத்தி ஓரமாகக் கிடந்த பெரிய பாறைமீது மோதவிட்டான் ஸ்லேட்டர்...
இதோ-கிளம்பிவிட்டது! அதன் அடியில் அகப்பட்டுக்கொள்பவர்கள் சட்னியாகிப் போவது நிச்சயம்!
பாறை உருண்டோடி வருவதை முதலில் விக்டர்தான் பார்த்தான்..
பெரிய பாறையை உருட்டி விட்டுப் போகிறார்கள்... எக்ஸ்பிரஸ் இரயிலின் வேகத்தோடு வந்து கொண்டிருக்கிறது...!
மாட்டிக்கொண்டு விட்டோம். அதை தடுத்து நிறுத்த ஆற்றல்மிக்க ஆர்ச்சியாலும் முடியாது!
78


சட்டென்று தாம்சன் ஓர் யுக்தி செய்தான்...
அந்தப் பெரிய பாறையை நகர்த்தி நம் வாகனத்தின் முன்னால் கொண்டு வா - சீக்கிரம்...!
மின்னல் வேகத்தில் செய்து முடித்தது ஆர்ச்சி
நீயும் படுத்துக் கொண்டுவிடு ஆர்ச்சி .. உருண்டோடிவரும் பாறை இந்தப் பாறைமீது மோதி அப்படியே நம்மைத் தாண்டிப் பறந்து சென்றுவிடும்!


மூச்சைப் பிடித்துக்கொண்டு பதுங்கிக் கிடந்தார்கள்...
அப்பா! பலித்து விட்டது யுக்தி- பிழைத்துக்கொண்டு விட்டோம்!
பயணம் தொடர்ந்தது...
எதிரிகள் கண்ணில்படக் காணுமே! உருண்டோடி வந்த பாறை நம்மை சில நிமிடங்கள் தாமதிக்கச் செய்துவிட்டது-அதற்குள் எதிரிகள் வெகு தொலைவு சென்றிருக்க வேண்டும்!
போச்சு... ஒரு எலும்புகூட மிஞ்சப் போவதில்லை!
திடீரென்று-எவ்வித முன்னறிவிப்புமின்றி ஸ்லெட்ஜ் நழுவி ஓடியது...
ஏதாவது சர்க்கஸ் வேலை செய்து ஆர்ச்சி நம்மைக் காப்பாற்றினால்தான் உண்டு...


தாம்சனின் நடுங்கும் விரல்கள் டிரான்ஸ்மீட்டரை துரிதகதியில் இயக்கின...
அப்படித்தான்... ஆர்ச்சி! தொடர்ந்து செல்ல வகை செய்-இத்தனை வேகத்தில் போய்க்கொண்டிருக்கையில் ஸ்லெட்ஜ் வண்டி கவிழ்ந்ததோ-தொலைந்தோம்


சரிவு தலைகீழாக இறங்கியது - ஸ்லெட்ஜின் வேகமும் வரவர அதிகரித்தது...
உயிர்பிழைக்க வாய்ப்பிருப்பதாகவே தெரியவில்லை!
மறுகணம்-
காலை ஊன்றி விசையாக உந்தித் தள்ளு... ஆர்ச்சி!
ஆ...வ் பள்ளத் தாக்கினுள் விழப் போகிறோம்!


ஆர்ச்சி அப்படி உந்தித் தள்ளிய மறுகணம் அப்படியே காற்றில் மிதந்தார்கள்.
ஆர்ச்சியின் சாமர்த்தியமான செயலால், இடைப்பட்ட பள்ளத்தை தாண்டிவிட்டோம்-ஆபத்தில்லாமல்!



மறுமுனையைத் தொட்டதும் மூங்கிலால் ஆன சறுக்கு அமைப்பு நொறுங்கியது .. ஆனாலும் ஸ்லெட்ஜ் வண்டி நிற்கவில்லை...
எங்காவது போய் மோதிக்கொள்ளாமல் நிறுத்த வழியில்லை...
எதிரே நிற்கும் அந்த இரண்டு மரங்கள்தான் நம்மைப் காப்பாற்றப் போகின்றன...



இரண்டு மரங்களுக்குமிடையே ஸ்லெட்ஜ் பாய்ந்து புகுந்தபோது சட்டென்று எழுந்து அந்த மரங்களை இறுகப் பற்றிக் கொண்டு விட்டது ஆர்ச்சி!
விக்டர்... நாம் தூக்கி எறியப்படலாம்- எச்சரிக்கை!


மறுகணம்-தாம்சனும் விக்டரும் அருகேயிருந்த புதருக்குள் தூக்கி எறியப்பட்டனர்.
எத்தனை பெரிய ஆபத்திலிருந்து தப்பியிருக்கிறோம்-ஆர்ச்சிக்கு ஆயிரம் கோடி நன்றிகள்!
அம்மாடி பிழைத்தோம்!



விநாடி நேரத்தையும் வீணடிக்க விரும்பவில்லை அவர்கள்.
சற்றுமுன் நாம் மேற்கொண்ட மின்னல் வேக பயணம் எதிரிகளின் அருகே நம்மை கொண்டு வந்துவிட்டது...
இதோ தெரியும் டாங்க் வாகனத்தின் சுவட்டை பின்பற்றிச் செல்வோம். அவர்கள் அதிக தொலைவு சென்றிருக்க முடியாது...


தடத்தை பின்பற்றிச் சென்ற அவர்கள் ஒரு ஆற்றின் கரையை வந்தடைந்தார்கள்.
அவர்களுடைய விந்தை வாகனம் மிகச் சுலபமாக ஆற்றைக் கடந்துவிட்டிருக்கும்... நாம் எப்படி ஆற்றைக் கடப்பது?
ஆழமில்லாவிட்டால்... இறங்கிச் சென்று விடலாம்!


ஆழம் மட்டுமின்றி வேறொரு பிரச்னையும் அவர்களை எதிர்கொண்டது...
ஓடு... ஓடு- ஆள்விழுங்கி மீன்கள்... அவை!
சைத்தான்கள்!


பின்னர் தாம்சன் ஒரு யுக்தி செய்தான். அதன்படி ஆர்ச்சி நீண்ட வலிமையான கொடி ஒன்றை எடுத்து அதில் கல் ஒன்றை பிணைந்தது...
கயிற்றை மறு கரையோடு இணைத்து, நாம் அதன்வழி யாக ஆற்றைக் கடந்து விடலாம் என்று நினைக்கிறேன்.


கல்லை எதிர்க் கரையை நோக்கி வீசியது ஆர்ச்சி
அதுபோய் மரத்தில் சுற்றிக் கொள்ளவேண்டும்- பலித்து விட்டால் பிரச்னை தீர்ந்த மாதிரிதான்!


கொடியைப் பிடித்து தொங்கியவாறு நண்பர்கள் இருவரும் எதிர்கரையை நோக்கி நகர்ந்தனர்...
காலைத் தாழ தொங்க விடாதே! பாய்ந்து கடித்துக் குதறிவிடப் போகின்றன!


கொடி உறுதியானதாக இருக்க வேண்டும்- ஆர்ச்சியின் எடையைத் தாங்குமளவுக்கு ..!
கவலைப்படாதே!... அங்கே பார்-பாவம்... அந்த மீன் தன் பற்களை இழக்கப் போகிறது!
அப்போது பெரிய மரம் ஒன்று ஆற்று நீரில் மிதந்து வந்ததை தோழர்கள் கவனிக்கத் தவறி விட்டார்கள்...


வேகமாக வா... ஆர்ச்சி!
தாமதிக்கும் ஒவ்வொரு விநாடியும் எதிரிகளை விரட்டி பிடிக்கும் வாய்ப்பு குறைந்து போகும்!


விக்டர்தான் ஆர்ச்சியை நோக்கி வந்து கொண்டிருந்த பேராபாயத்தை முதலில் கவனித்தான்...
ஐயோ... ஆபத்து- அங்கே கவனி! மரம் ஒன்று-
கவலைப்படாதே... ஆர்ச்சி தன் கால்களை தூக்கிக் கொண்டு விடச் செய்கிறேன்!
ஆனால் மரத்தின் கிளை ஒன்று கொடியை துண்டித்து விட்டது
ஆர்ச்சி அகப்பட்டுக் கொண்டுவிட்டது...


சுதாரித்துக்கொண்டு எழ முடியாமல் தத்தளித்தது ஆர்ச்சி ..
தன்னை விடுவித்துக் கொள்ளும்படி ஆர்ச்சியை தூண்டியும் பயன் இல்லையே!
இடுக்கியில் மாட்டிக் கொண்டது போல் திணறியது ஆர்ச்சி...
நீரோட்டம் மரத்தோடு ஆர்ச்சியையும் இழுத்துச் செல்கிறது
ஓடி வா... அதை விடுவிக்க முயற்சிப்போம்!


ஆர்ச்சியை எப்படியும் காப்பாற்றிவிட வேண்டும் என்ற வெறியோடு ஓடினார்கள்.
ஆர்ச்சி நம் பார்வையிலிருந்து தப்பி விட்டால் ஆபத்தாகிவிடும் — நீரோட்டத்தின் வேகத்தையும் மிஞ்சி ஓடினால்தான் ஆர்ச்சியை நாம் நெருங்க முடியும்!
...கவனி! ஏதோ முழக்கம் கேட்கிறது...!


சற்றுத் தொலைவில் தலைநீட்டிக் கொண்டிருந்த குத்துப் பாறைகளினூடே பாய்ந்தோடியது நீரோட்டம்...
நீர்வீழ்ச்சி...
அந்தப் பாறைகளில் மோதி ஆர்ச்சி நொறுங்கிவிடும்!


ஆனால் மிதந்து வந்த ஆர்ச்சியை
குறிவைத்து வழியில் காத்துக்
கொண்டிருந்தது வேறொரு ஆபத்து!


ஆர்ச்சி கிட்டே வந்ததும் சட்டென்று பாய்ந்தது
அந்த இராட்சஸ மலைப் பாம்பு ..
இது என்ன புதுத் தொல்லை?
ஆர்ச்சியை சாப்பிட நினைக்கிறது போலும்!


ஒரு ஐடியா! அந்த
பாம்பை பயன்படுத்தி
ஆர்ச்சியை மீட்டு
கரை சேர்த்து விடலாம்
ஆர்ச்சி பற்றிக்கொள்ள ஏதோ ஒன்று
கிடைத்தவரை நிலைமையில்
முன்னேற்றம்தான்!
ஆமாம், ஆர்ச்சி-அந்த
பாம்பை அப்படி இறுகப்
பற்றிக்கொண்டாயானால்
மரக்கிளைகளின் பிடியிலி
ருந்து விடுவித்துக்
கொண்டு விடலாம்!
தன்னைவிட பலம் கொண்ட எதிரியை அந்த பாம்பு
சந்திப்பது இதுவே முதல் தடவை...
நம் திட்டம்
பலித்துவிட்டது.
அந்த பாம்புக்கு
போதாத
காலம்தான்!


அப்போது ஏதோ முறியும் சப்தம் கேட்டு தோழர்கள் திடுக்கிட்டனர்
கெட்டது...போ! கிளை பளு தாங் காமல் முறிந்து விட்டது.
சே .. கடைசி நிமிடத்தில் இப்படி ஒரு கழுத்தறுபபா!
அப்போது அசட்டுத் துணிச்சலான ஒரு தீர்மானத்துக்கு வந்தான் தாம்சன்...
ஓடிவா... நாமும் அந்த மரத்தில் தொற்றிக் கொண்டு ஆர்ச்சி கூடவே செல்வோம்!
முறிந்த கிளை நீரினுள் விழுந்தது...
ஓடி...வா!
ஜாக்கிரதை!



கிளை நீரினுள் விழுந்தபோது ஏற்பட்ட கொந்தளிப்பால் மரம் மீண்டும் நீரோட்டத்தின் மத்திய பகுதியை நோக்கி நகர்ந்தது....
நம் கணிப்பு தவறி விட்டது ..!


குத்தும் பாறைகளை நெருங்கியது மரம் ..
ஹூம்... அந்தப் பாறைகளில் மோதினால் நம் எலும்புகளில் ஒன்றுகூட மிஞ்சாது...
கலவரப்படாதே...! ஆர்ச்சியின் துணை இருப்பதை மறந்து விட்டாயா?


தாம்சனின் டிரான்ஸ்மீட்டர் ஆர்ச்சியை தூண்டியது...
அந்த கம்பை எடுத்துக்கொள் ஆர்ச்சி...
மரம் புரண்டுவிடப் போகிறது... ஜாக்கிரதை!


மரத்தின் போக்கை ஓரளவு கட்டுப்படுத்த இப்போது சாத்தியமாகிவிட்டது!
... இடப் பக்கமாக-ம்.. போதும்-இனி கொஞ்சம் வலப்பக்கம் ...ஆங்! அப்படித்தான்!



பாறைகளில் மோதுண்ட மற்ற மரங்கள் நொறுங்கிப் போயின...
இப்படியே சமாளித்துக் கொண்டு வா... ஆர்ச்சி!
அவர்களுடைய உயிர் இப்போது முழுக்கமுழுக்க ஆர்ச்சியின் கையில். .!
ஆர்ச்சி துணையிருக்கும்வரை பயமேயில்லை!
ஒரு வழியாக பாறைகள் இருந்த பகுதியைத் தாண்டியாகிவிட்டது...
அந்த சுழலை விட்டு விலக்கி செலுத்துகிறது!
இனி ஆபத்து குறைவுதான்!


ஆனால் ஒரு வளைவில் திரும்பியதும் எதிரே தென்பட்ட காட்சி அவர்களை அதிரச் செய்தது-
அங்கே தரையின் கீழாக செல்கிறது ஆறு...!
நாம் செய்வதற்கு இப்போது ஒன்று மேயில்லை-



ஆர்ச்சியின் முகப்பு விளக்கை எரியச் செய்தான் தாம்சன் -
எங்கேதான் போய்க் கொண் டிருக்கிறோம் என்று தெரிந்து கொள்ள இது உதவுமல்லவா?



குகைப் பாதையினூடே சென்றபோது வெளவால்கள் கிறீச்சிட்டுக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக பறந்தன
அவைகளால் ஆபத்து ஏதும் வருவதற்கில்லை!



மறு நிமிடம்-நண்பர்களை குறி வைத்து வந்தது இன்னுமொரு ஆபத்து!
ஆவ்... ராட்சஸ முதலை...! ஆர்ச்சி எங்களை காப்பாற்று!


ஆர்ச்சிக்கு இது ஒன்றும் பெரிய பிரச்னையே அல்ல!
பிரமாதம்...! வாயைத் திறக்க முடியாமல் பண்ணிவிட்டது!
ஆர்ச்சி மட்டும் இல்லாதிருந்தால் .. அப்பப்பா-


ஆபத்தான அந்தப் பயணம் நீண்டு கொண்டே போனது... இறுதியில்-


வகையாக மாட்டிக்கொண்டு விட்டோம்!
கரை சேர எங்களுக்கு உதவி செய்... ஆர்ச்சி!



பாறைகளினூடே தட்டுத் தடுமாறி ஏறினர்...
முன்னாலும் போக முடியாது திரும்பிச் செல்லவும் முடியாது!
அப்படியில்லை இங்கே வந்து இதை கவனி!


எதிரிகளின் வாகனம் சென்ற தடம் இருந்தது அங்கே!
ஒரே புதிராக அல்லவா இருக்கிறது..
எந்த வழியாக அது சென்றிருக்க முடியும்?


அந்த வாகனம் நீர்வீழ்ச்சியின் குறுக்கே சென்றிருக்க வேண்டும். ஆர்ச்சியின் துணை யோடு நாமும் அவ்வாறே செல்வோம்!
உனக்கென்ன பைத்தியமா? பயங்கரமாக விழுந்து கொண்டி ருக்கும் நீர்வீழ்ச்சியினடியில் நாம் சிக்கினால் அப்பளமாக நொறுங்கிப் போவோம்!


பலகை போலிருக்கும் அந்தப் பாறையை எடுத்துவா ஆர்ச்சி .. எதிரிகளின் வாகனத்தால் நீர்வீழ்ச்சியின் குறுக்கே தாக்குப்பிடித்து கொண்டு போக முடிந்தது என்றால் நாமும் ஏன் அப்படி ஒரு முயற்சியை மேற்கொள்ளக் கூடாது?


அந்த பெரிய பாறையை தன் தலைக்குமேல் உயர்த்திப் பிடித்துக்கொண்டது ஆர்ச்சி.
ARCH
ஆர்ச்சியின் தோளை இறுகப் பற்றிக்கொள் விக்டர்! இந்த புதுவகை குடை நீர்வீழ்ச்சி யின் அழுத்தத்திலிருந்து நம்மை காப்பாற்றும்!


மூச்சைப் பிடித்துக் கொண்டு நீர்வீழ்ச்சியின் குறுக்கே மெள்ள மெள்ள நகர்ந்தார்கள்...


ஒரு வழியாக மறுபக்கம் சென்றடைந்தனர்...
இனி அவ்வளவாக பிரச்னை இராது என்று தோன்று கிறது!
இந்தக் குடை இனி தேவைப் படாது ஆர்ச்சி-விளக்கையும் அணைத்துவிடலாம்!
சில நிமிட வேக நடைக்குப் பின்னர்-
அதோ இருக்கி றார்கள்... நம் எதிரிகள்! தங்கத்தை அவர்கள் கண்டுபிடித்து விட்டதாக தோன்றுகிறது!
இப்படி நாம் அவர்களைப் பின் தொடர்ந்து வந்து சேருவோம் என்று கனவிலும் எண்ணி பார்த்திருக்கக் கூட மாட்டார்கள்
தன் வசமிருந்த வரை படத்தை எடுத்து ஆராய்ந்தான் விக்டர்..
அழிந்து போன தங்கச் சுரங்கம் இருந்த இடம் என்று இதில் குறிக்கப்பட்டிருக்கும் இடம் இதுதான்-நமக்குச் சொந்தமாகவேண்டியதங்கத் தைத்தான் இப்போது அவர் கள் அங்கே சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள்!


நிம்மோவும், ஸ்லேட்டரும் வெற்றிக் களிப்பில் உற்சாகமாக இருந்தனர்
துப்பாக்கிகளை கொடுத்து தங்கம் கிடைக்குமிடம் பற்றிய விபரங்களை காட்டு வாசிகளிடமிருந்து சேகரித்த நம் புத்திசாலித்தனத்துக்கு ஏற்ற வெகுமதி தான் இது!
ஆர்ச்சி அவர்களை நோக்கி முன்னேறியது...
அவர்களிடம் ஆயுதங்கள் இருப்பதோடு பல வசதிகள் கொண்ட நூதன வாகனமும் இருக்கிறது.
கொஞ்சம்கூட ஓசைஎழும்பக் கூடாது .. இல்லையேல்- தொலைந்தோம்! திடீர் தாக்குதல் நடத்தினாலன்றி அவர்களை வெற்றி கொள்ள முடியாது!


துரதிர்ஷ்டவசமாக காட்டுப்பன்றி ஒன்றி
ரண்டு போய் புதருக்குள்ளிருந்து
வெளிப்பட்டு ஓடியது ..
சே... கெட்டது
காரியம்.
எதிரிகள்
நம்மைக்
கவனித்து
விட்டார்கள்!
சலசலப்பைகேட்ட எதிரிகள்
திடுக்கிட்டு திரும்பிப்
பார்த்தனர்...
தாம்சனும்,
விக்டரும்!
இவர்கள்
எப்படி...
இங்கே?
நம் வாகனத்தை நோக்கி
ஓடி வா... இம்முறை
அவர்களுடைய மரணத்தை
உறுதி செய்து விடலாம்!
மறு நிமிடம்...இயந்திரத் துப்பாக்கி
முழங்கத் தொடங்கியது...
ஹே... விக்டர்-
ஜாக்கிரதை!
அவர்களை நோக்கி வாகனத்
தை செலுத்து... குண்டுகள்
அவர்களை வீழ்த்தத் தவறி
னால் மோதி அழிப்போம்!


சரமாரியாக தோட்டாக்கள் பறந்து வந்தன... ஆர்ச்சிக்குத் தான் தோட்டாக்களைப் பற்றி பயமே கிடையாதே!
ம்... சீக்கிரம் வெட்டி எடு .. ஆர்ச்சி!
அடுத்து அங்கே நிகழ்ந்ததைக் கண்ட எதிரிகள் பிரமிப்பில் திக்குமுக்காடிப் போனார்கள்...
நேராக நம் மீது வந்து குதிக்கப் போகிறானே...!
'தொம்'மென்று வாகனத்தின் மீது இறங்கியது ஆர்ச்சி.
அந்த இயந்திர துப்பாக்கியை முதலில் கவனி...!


ஆர்ச்சிக்கு துப்பாக்கி குழாயை வளைப்பது ஒன்றும் பெரிய காரியமல்ல ..


வாகனத்தை தாறுமாறாக ஓட்டி ஆர்ச்சியை கீழே தள்ளிவிட முயன்றனர் எதிரிகள்...
ஆர்ச்சியால் சமாளிக்க முடியுமோ?
தெரியவில்லை .. ஆனால் ஒன்று நிச்சயம் - அது தோற்றுவிட்டால் நாம் மூவருமே தொலைந்தோம் இத்தோடு!



ஆர்ச்சி... விடாதே - சமாளி...!
ஆர்ச்சிக்கு முழுத்திறன் கொடுத்து டிரான்ஸ்மீட்டரை இயக்குகிறாயல்லவா?


பீதி வயப்பட்டு நடுநடுங்கிய தன் தோழனுக்கு திம்மோ ஒரு யோசனை சொன்னான்....
மரங்களினூடே வாகனத்தை கொண்டு போ இரும்பு மனிதன் நொறுங்கிப் போவது உறுதி!


தாம்சனும், விக்டரும் பின்தொடர்ந்து ஓடினார்கள்....
ஏதோ திட்டத்தோடு தான் வாகனத்தை அந்தப் பக்கம் செலுத்துகிறார்கள்.....
மரக்கிளைகளில் மோதி ஆர்ச்சி நொறுங்கிப் போய்விடும்!
நானொரு யுக்தியை கையாளப் போகி றேன்! இதோ-
அதன்படி ஆர்ச்சி மின்னல் வேகத்தில் தாவி மரக்கிளை ஒன்றை பற்றிக் கொண்டது....
அப்படியே காலால் ஓங்கி ஒரு தெம்பு... ஆங்... அப்படித் தான்... பலே...!
அவர்களுடைய வாகனம் பக்கவாட்டில் சாய்கிறது....!


மறுகணம் வாகனத்தின் எஞ்சின்
அர்த்தமில்லாமல் முனகியது ..
கிராதகன்...! நாசமாகப்
போக- . இரும்புச்சனியன்!
ஆவ்-ஐயோ.. !



டிரான்ஸமீட்டரை தொடர்ந்து கவனமாக இயக்கினன்
தாம்சன்... அதன்படி ஆர்ச்சி சுறுசுறுப்பாக இயங்கியது.
அந்த கண்ணுடிக்
கூண்டை அகற்றி
அவர்களை
வெளியேற்று...!
நாங்கள்
சரணடைகிறோம்...
காப்பாற்றுங்கள்!



ஒரு வழியாக அவர்களை வெளியே கொண்டுவந்தது ஆர்ச்சி...
இனி விஷமம் பண்ண தைரியம் இராது பயல்களுக்கு!
அவர்களை ரொம்பவும் மிரட்டாதே ஆர்ச்சி .. அதற்கு அவசியமே இல்லை!


சில நிமிடங்களுக்குப் பின் -
ஆர்ச்சி வாகனத்தை பழுது பார்த்து முடிப்பதற்குள் நீங்கள் போய் எங்களுககாக இன்னும் கொஞ்சம் தங்கம் சேகரித்துக்கொண்டு வாருங்கள்...
...ஏதாவது விஷமம் பண்ண முயற்சித்தீர்களோ ஆர்ச்சியை ஏவி விட்டுவிடுவேன் - ஜாக்கிரதை!



மணலைச் சலித்து தங்கத் துகள்களை சேகரித்தனர்-ஜிம்மோவும் ஸ்லேட்டரும் ..
நாம் புறப்பட்ட வேளை சரியில்லை -ஹூம்!
இந்தத் தங்கம் நம்மை கோடீஸ்வரர்களாக மாற்றி விடப் போவதில்லை என்றாலும் நமக்கு இதுவரை ஏற்பட்டிருக்கும் இழப்பை நிச்சயம் ஈடுகட்டிவிடும்!
ஒப்பந்தப்படி குற்றவாளிகளை கொண்டு போய் போலீஸாரிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு இருந்தது நண்பர்களுக்கு...
எப்போதும் இவர்கள்மீது ஒரு கண் இருக்கட்டும் ஆர்ச்சி ..!
இதற்கிடையே- அங்கே ஸான் புருஜோ போலீஸ் தலைமையகத்தில்...
அவர்களுடைய பேச்சை நம்பி விடுதலை அளித்தது தவறோ?
தாசம்முக்கும் விக்டருக்கும் நாம் விதித்த கெடு முடிகிறது ஸார்-குற்றவாளிகளோடு அவர்கள் இன்னும் திரும்பிவந்த பாடில்லை.


ஆனால்... அதே கணத்தில்-
இரும்பு ராட்சஸன் அதோ வருகிறான்!
அது என்ன வகை வாகனமோ... புரியவில்லையே!



அதையடுத்து-நடந்த சம்பங்கள் அனைத்தும விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டன...
இந்தப் புதுவகை வாகனத்தை, உங்களிடம் ஒப்படைத்துச் செல்கிறோம், ஸார்! ஸிம்மோவுக்கும் ஸ்லேட்டருக்கும் கொஞ்ச காலத்துக்கு இது தேவைப்படாது!
அவர்களுக்கு நாலைந்து வருடமாவது தீட்டிவிடுவார்கள்... இல்லையா!


தாங்கள் கண்டெடுத்து, வந்த தங்கத்தை விற்று புது ஜீப் ஒன்றும், மற்ற தளவாடங்களும் வாங்கிக்கொண்டார்கள் தோழர்கள்.
எங்கள் அனைவரும் உங்கள் அபிமானிகள்-எங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்!
நன்றி... வணக்கம்- சென்று வருகிறோம்!
அடுத்து உலகின் எந்தப் பகுதியை நோக்கி நம் பயணம் அமையப் போகிறதோ... தெரியவில்லை!
ஆர்ச்சி துணை இருந்தால் எங்கு வேண்டுமானாலும் நாம் தைரியமாக பயணம் மேற்கொள்ளலாம் இல்லையா!
முற்றும்.


விச்சு & கிச்சு
உடுப்பு பலே ஜோராய் இருக்கிறதே! என்ன விசேஷம் கிச்சு?
தபால் மூலம் ஜூடோ பயிற்சி எடுத்து வருகிறேன் விச்சு! இதோ ஒரு சாம்பிள் காட்டுகிறேனே - என் கையை குலுக்கு பார்க்கலாம்!
சே! இந்த பயிற்சி புத்தகம் சரியாக இருந்திருக்குமானால் உன்னை நான் தாக்கி வீசி எறிந்திருக்க வேண்டும்! சுத்த மோசடி!
இரண்டாவது பயிற்சி முறையாவது ஒழுங்காக இருக்கிறதா பார்க்கலாம். என்னை கீழே சாய்க்கப் பார் விச்சு!
பாறை போல நிற்க வேண்டும் நான்! அவ்வளவுதான்!


ஐயோ! ஐயோ! புத்தகம் முழுவதுமே பித்தலாட்டம்! ஏமாற்றப் பார்க்கிறார்கள். இந்த கிச்சுவை? என் பணம் முழுவதையும் வாபஸ் வாங்கப் போகிறேன்!
"முகவாய்க்கு நேராக வரும் முஷ்டியை சமாளிப்பது எப்படி" என்ற இந்த பயிற்சி சரியாகத் தானே தோன்றுகிறது".
ஓ.ஹோ... அப்படியா நினைக்கிறாய்? இந்தா இதை சமாளி பார்க்கலாம்!
நான் சொன்னேனில்லையா கிச்சு? கோளாறு புத்தகத்தில் இல்லை!


விச்சு & கிச்சு
இதுவரை ஒரு பந்தைக் கூட நீ சுடவில்லையே கிச்சு?
ஐயோ பாவம், சாருக்கு மாலைக்கண் போலும்!
அவன் கிடக்கிறான் கிச்சு! அது சரி நீ துப்பாக்கி சுடுவதில் கில்லாடி என்றல்லவா நினைத்தேன்!
நான் கில்லாடியே தான்! ஆனால் - அந்த மோசக் காரனது துப்பாக்கிகள் எல்லாமே வளைந்து இருக்கிறது விச்சு!
தண்ணீர் குழாயை ஏன் ஓட்டைபோடு கிறாய் கிச்சு?
ஐயாவின் துப்பாக்கி சுடும் திறமையை காட்டப் போகிறேன் பார்!
ஆனால் உன்னிடம் ஏது துப்பாக்கி!
என் கொள்ளுத் தாத்தாவின் யானை வேட்டை துப்பாக்கி இருப்பதை மறந்து விட்டாயா?


டுமீல்!
புகை மூட்டம் விலகியது.
பார்த்தாயா? எல்லா பந்தை யும் சுட்டுத் தள்ளி விட்டேன்!
என் குறி வைக்கும் திறனில் பிசகு இல்லை என்பது புரிகிறதா? வா - அந்த துப்பாக்கிக்காரனைப் போய் பார்ப்போம்!
GALLERY
என்னய்யா கடை நடத் துறே! இப்பொழுது தான் ஒரு டஜன் பந்துக்களை என் தோட்டத்தில் சுட்டுத் தள்ளி விட்டு வந்திருக் கிறேன்!
ஓஹோ - அது நீ தானா? உன் யானை தோட்டாக்கள் என் கடையையும் துளைத்து விட்டன!
GALLERY
பாதை வளைந்து வளைந்து இருப் பதால் அவனால் நேராய் குறி வைக்க முடியாது!
கிச்சு - நீ தானே சொன்னாய்- துப்பாக்கிகளெல்லாம் வளைந்து இருக்கின்றன என்று - வளைவு வரும் பொழுது கூட அவர் சுட்டு விடப் போகிறார் - ஜாக்கிரதை!


இரும்புக் கை
மாயாவி தோன்றும்
பறக்கும் பிசாசு!
ஸ்பைடரின்
பாதாளப்
போராட்டம்!
ப்ளாஸ்